# சத்திய வேத
# பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)


### ஞானோபதேச கருத்தரங்கு

மன்னார் மாவட்ட ஆசிரியர்களுக்கு இம்மாதம் 14-ம், 15-ம் தேதிகளில் புனித சவேரியார் கல்லூரியில் கருத்தரங்கு நடைபெறும். எல்லா ஆசிரியர்களையும் தயவுசெய்து சமுகம் கொடுக்கும்படியாக வேண்டிக்கொள்கிறோம்.

வண. பிதா ஜி. ரி. பாலசுந்தரம், ஓ. எம். ஐ.,
ஞானோபதேச மேற்பார்வையாளர்.


95-ம் புத். | 1970-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 5-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 33-ம் இல.


## ஆசிரியரின் வேலை — ஒரு புனித சேவை

**" ஆசிரியரின் வேலை சம்பளம் பெற்றுச் சீவியத்தை நடத்தச்செய்யும் தொழிலாக மாத்திரம் கருதப்படாது; மக்களுக்கு நாம் செய்யக்கூடிய புனித சேவைகளில் ஒன்றாகக் கருதப்படல் வேண்டும். நல்ல ஆசிரியரின் சேவையாலேயே ஒருநாட்டின் ஒழுக்கமும், அறிவும் உருவாக்கப் படுகின்றது. இத்தகைய ஆசிரியர்களை இக்கல்லூரி கொண்டிருப்பது இப்பகுதி மக்களுக்குக் கிடைத்த மாபெரும் பாக்கியமே.**

இவ்வாறு மொறட்டுவ புனித செபஸ்தியார் கல்லூரிவிளையாட்டுப்போட்டி தினத்தில் கருதினால் கூறே அடிகளார் கூறினார். அக்கல்லூரி ஆசிரியர்கள் பலவகைக் கஷ்டங்களையும் பாராது திறமையாகத் தம் கடமைகளைச் செய்துவருவதைப் பாராட்டிய கருதினால் அடிகள், அப்பள்ளிக்கூட மாணவர்களது பெற்றோருக்குக் கூறிய புத்திமதியில், பிள்ளைகளை நல்லொழுக்கத்தில் வளர்ப்பதில் கண்ணுங் கருத்துமா யிருக்குமாறும், பள்ளிக்கூட அதிகாரிகளுடன் ஒத்துழைக்குமாறும் வேண்டிக்கொண்டார்.

### அவலட்சணமான ஆடைகளும் அலங்கோலமான போக்குகளும்

சென்றவாரம் பரி. தந்தை அளித்த பகிரங்கப் பேட்டியில் உலகில் தலைகாட்டியிருக்கும் அவலட்சணமான ஆடைகளையும், அலங்கோலமான போக்குகளையும் வன்மையாகக் கண்டித்தார். மக்கள் தமது தேக இச்சைசைகளுக்கு முதலிடம் அளித்து வருவது தேவனுடைய கட்டளைக்கு முழுமாறாக இருக்கின்றது என்றும் மனுக்குலத்தை இழிவுபடுத்துகின்றது என்றும் கூறி, தூய வாழ்வைக் கடைப்பிடித்துத் தேவனது கட்டளையை அனுசரித்து ஆன்ம சுத்தத்துக்கு இடையூறானவற்றை அகற்றிவிடவும் கேட்டுக்கொண்டார்.

## கத்தோலிக்க லிமறிக்நகரத்தின் பெருந்தன்மை

தென் அயர்லாந்து தேசத்திலுள்ள லிமறிக் நகரம் கத்தோலிக்க வேத வைராக்கியத்துக்கு பெயர் போனது. அங்கிருந்து நூற்றுக்கணக்கான மக்கள் குருமாராகி தேவனின் சுவிசேஷத்தை உலகின் பல திசைகளுக்கும் கொண்டு சென்றிருக்கின்றனர். அந்நகரிலுள்ள புரொட்டஸ்தாந்து சமயத்தவர்களுடன் அங்குள்ள கத்தோலிக்க மக்கள் மிகச்சிநேக பான்மையுடன் கொண்டாடிவருகின்றனர். அந்நகர புரொட்டஸ்தாந்து மேற்றிராணியார் தம்பதவியிலிருந்து அண்மையில் ஓய்வுபெற்றுக்கொண்ட பொழுதுகத்தோலிக்கர் அவருக்கு பெரும் மகிமை அளித்தனர். 17 அங்கத்தவா அடங்கிய நகர பிதாக்களின் சபையில் 17 பேரும் கத்தோலிக்கரே. அவர்கள் யாவரும் ஒருமித்து புரொட்டஸ்தாந்து மேற்றிராணியாராகிய ஜாக்சன் அடிகளாருக்கு கொண்டாட்டம் வைத்து நகர சுதந்திர திறவுகோலைத் தம் அன்பின் சின்னமாக அளித்தனர்.

## கருதினால் குறித்த சமூக ஊழல்கள்

அண்மையில் லண்டன் மாநகரில் நடைபெற்ற சர்வதேச இளம் கிறிஸ்தவ மாணவர் மகாநாட்டில் ஆபிரிக்ககண்ட கருதினால் றூகம்புவா உலகை அலங்கோலம் செய்யும் இரு பெரும் சமூக ஊழல்களைச் சுட்டிக்காட்டினார். இவைகளில் ஒன்று நிறத்திமிர். ஆயுத பலத்தினால் அதிகாரபீடத்தில் ஏறிக்கொண்ட பலம்பொருந்திய சிறுபான்மை இனத்தவர் ஆயுதபலமில்லாத பெரும்பான்மை இனத்தவரை அடக்கி அநீதியான ஆட்சி செய்கின்றனர். இதனால் தென் ஆபிரிக்காவில் நடக்கும் வெள்ளையர்—நிறத்தவர் பூசலையே கருதினால் அடிகள் குறிப்பிட்டார். இரண்டாவதாக அமெரிக்க செல்வம் படைத்த நாடுகள், உண்ண உணவின்றிப் பலவகை இன்னல்களையும் அனுபவிக்கும் நாடுகள் என இருவகையினருக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளையும் சுட்டிக் காட்டினார். உலக சமாதானம் நிலவ இவ்விரு ஊழல்களும் இல்லாது அகலவேண்டுமென அவர் கூறினார்.

### போதனையில் சாதனை நன்று பிரதமர் வழிகாட்டுகின்றார்

இன்னும் சிலவாரங்களில் ஆபிரிக்க கண்டத்தில் லுசாக்கா நகரத்தில் நடக்க இருக்கும் மண்டலசார்பற்ற மகாநாட்டுக்கு எமது பிரதமர் செல்ல இருக்கின்றார். இவர் தமது பிரயாணங்களை இடாம்பீகமற்ற குறைந்த வகுப்பில் விமானமூலம் செல்ல ஒழுங்குகள் செய்திருக்கின்றார். இவர்முன் எமது பிரதமர் எவரும் இவ்வகையில் குறைந்த வகுப்பில் பிரயாணம் செய்யவில்லை. பணத்தட்டுப்பாடுள்ள இந்நாட்களில் அரசாங்கத்துக்கு ஏற்படும் செலவுகளை யாவரும் குறைக்க முயற்சிக்க வேண்டுமென்பதற்காகவே இவ்வாறு எமது பிரதமர் வழிகாட்டுகின்றார்.

## லங்கா மாதாவுக்குப் பாப்பரசர் முடிசூட்டுவாரா?

சென்ற வாரம் கருதினால் கூறே அடிகளார் கொழும்பு அதிமேற்றிராணியார் இல்லத்திலிருந்து விடுத்திருக்கும் விண்ணப்பத்திலிருந்து பரிசுத்த தந்தை இவ்வருடம் கார்த்திகைமாதம் பிலிப்பையின் தீவுக்கும், அவுஸ்திரேலியாவுக்கும் ஆகாய விமானத்தில் செல்லும் வழியில், கட்டுநாயக்காவில் இறங்க நேர்ந்தால் தேவத்தை மாதேவாலயத்தில் லங்காமாதாவின் திருச்சுரூபத்துக்கு தமது கைகளினாலேயே முடி சூட்டிவைக்கும் பாக்கியத்தை நாம் பெறலாமென நம்பச் சற்று இடமிருக்கிறது. றாகம பட்டணத்துக்கு அருகாமையில் உள்ள தேவத்தைக் கிராமத்தில் 20 வருடங்களுக்குமுன் ஆரம்பிக்கப்பட்ட மாதேவாலயம் ஒரளவுக்குமுடிவுபெற்றுவிட்டது. தேவத்தைச்சுரூபம் பத்திமா சுரூபத்தைச் செய்த அதேசிற்பியினால் செய்யப்பட்டுள்ளது. அச்சுரூபத்துக்குச் சூட்டும் முடியை பரிசுத்த தந்தை சின்னப்ப பாப்பரசரே தமது அன்பளிப்பாகக் கொடுத்திருக்கிறார். பாப்பரசர் இலங்கையில் தங்குவது நடக்கக்கூடிய கருமமென எண்ணி, இம் முடிசூட்டு வைபவத்துக்கு ஆயத்தம்செய்யும்படி கருதினால் அடிகள் விண்ணப்பித்திருக்கின்றார்.

## வருங்கால குருமாரின் பயிற்சியில் பெற்றோரின் பெரும்பங்கு

கண்டி மேற்றிராசன குருமாணவர் கனிஷ்ட கல்லூரியாகிய புனித சூசைமாமுனிவர் கல்லூரியின் புதிய தலைவர் வணக்கத்துக்குரிய லூசியன் பெரேரா சுவாமியார் அனுப்பிய அழைப்பை ஏற்று அக்கல்லூரி மாணவரின் பெற்றோரில் பெரும்பாலானோர் ஒன்றுகூடியிருந்த வைபவத்தில் அதிபர் சுவாமியார் பெற்றோருக்கு ஒரு மனுச்செய்து கொண்டார். அம்மனுவில் அக்கல்லூரியில் பயிற்சிபெறும் தம் பிள்ளைகளின் பயிற்சியில் அக் கல்லூரி ஆசிரியர்களுடன் ஒருமித்துக்கொள்ள வேண்டுமென்பதே. இன்றைய காலத்தில் பயிற்றப்படும் குரு மாணவருக்கு வீட்டு அனுபவங்கள் தேவைப்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டி வருங்கால குருமார் கோவில்களிலுள்ள தம் அறைகளைவிட்டு வெளியே சென்று மக்களுடன் ஊசாடிப் போதிக்கவேண்டியிருப்பதால் அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிக்கு அத்திவாரமாக பெற்றோர் அளிக்கும் பயிற்சி அவசியமாகின்றது என எடுத்துக் காட்டினார்.

> இளைஞனே, நீ என்றும் இளைஞனாகவே இருக்க யேசுவைத் தேடு.
> — புனித அகுஸ்தினார்.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கற்பனையின் கதி ஏதெனில், பரி. இருதயத்திலும் நல்ல மனச்சாட்சியிலும், போலியற்ற விசுவாசத்திலும் உண்டாகிற பரம அன்பாமே"

(பரி. தீமோத் -ம் நிரு. 1-ம் அதி. 5-ம் வசனம்)

எந்த ஒரு சமயமும், எந்த ஓர் இராட்சியமும, எந்த ஒரு சமூகமும் ஓர் ஒழுங்கு முறையை, ஓர் அமைப்புத் திட்டத்தை பின்பற்றியே நடக்கிறது. அதிகம் தொலைவில் யோசியாது, மிக அண்மையின் சூழலில் நமது கண்ணோட்டத்தைச் செலுத்தினால், ஒரு தொழிற்சாலையோ, கல்வி நிலையமோ, உத்தியோக கந்தோரோ, சில நிபந்தனைகளை, சட்டங்களை கடைப்பிடித்தே நடந்துவருவதை அவதானிக்கலாம். அங்கே ஒரு தலைவன், அவரின் கீழ் அவரது நிர்வாகத்தை நடத்துவோர், அவர்களுக்கும் கீழ் அவைகளை அனுசரிப்போர் என்று, பல அம்சங்கள் இருப்பதை அறியலாம். இப்படியான நிர்வாகங்கள் நன்மைபெறும் பொருட்டு, வெற்றிகாணும் பொருட்டு தத்தமக்கேற்ற சில சட்டங்களை அமைத்துக் கொள்கின்றன. அனுசரிக்கின்றனர். ஆயின் இவைகளில் சில உச்சிதநிலையடைந்து, அதன் இலக்கைக் கண்டடைவதையும், சில வெற்றிகாண முடியாது, சோர்வடைந்து, சிணித்துப்போவதையும் காண்கின்றோம். காரணம் என்ன?

எந்த ஒரு சமூகம் அங்குள்ள சட்டங்களை ஒழுங்குக் கிரமமாக அனுசரித்து வந்ததோ, எந்த ஒரு தாபனம், தன் தலைவனை உள்ளன்பாய் நேசித்து, நேர்மையான விதமாய் நல் மனச்சாட்சிப்படி நடந்து வந்ததோ, அது தவறாது வெற்றியைக் காண்கிறது. குறித்த இலக்கை அடைகிறது. சுருங்கக் கூறினால் ஒழுங்கை, திட்டவட்டமாக நேர்மையாக அனுசரிப்பதனால், நன்மையைக் கடைகிறது. இதுவே நமது கிறீஸ்த சமயக் கற்பனைகளின் கதியுமாகும். அதாவது தூய இதயத்துடன், நல்மனச்சாட்சிக்குப் பணிந்து கற்பனைகளை அனுசரிப்பதனால் உண்டாகும் விசுவாசம், கடவுளுடன் ஒன்றிக்கும் பரம அன்பாகமாறி, நற்கதியடையச் செய்கிறது.

இன்று திருச்சபையின் மலர்ச்சிக்காலம் என்பது யாவரும் அறிந்த விஷயம். தூய ஆவியானவரின் அருளால் யேசுநாதர் தம் திருச்சபையாகிய பரிசுத்த குடும்பத்தை நாசத்தில் வாசல் மேற்கொள்ளவிடாது புதுப்புது புத்துயிர் அளித்து ... பெறச் செய்கின்றார். ... மணம் வீசி மலரச்செய்கின்றார். இம்மலர்ச்சியைப் புரட்சியாக்க விரும்பும் சிலர், திருச்சபையின் சட்டங்கள் கடினமானவை என்று கலங்குகின்றனர். மனம்போன போக்கின்படி வாழ விரும்புகின்றனர். கற்பனைகளை அனுசரிக்க விரும்பாதோர் நற்கதியடைவார்களா? இவர்களுக்கு பரி. சின்னப்பர் மிகத் தெளிவாக விளக்கம் கொடுக்கிறார். "கற்பனைகளைத் திறப்பட அனுசரிப்பவர்கள் ... அவைகள் நல்லவைகள் என்று ஏற்றுக்கொள்கிறார்கள், ஆனால், கற்பனைகள் நீதிமான்களுக்கு அல்ல, அனீதருக்கும், அடங்காதவருக்கும், துஷ்டருக்கும், அக்கிரமிகளுக்கும், காமாதூருக்கும், குணமான போதகத்தை எதிர்க்கிறவர்களுக்கும், பொதுப்படக்கூறின், பாவிகளுக்குமாகவே ஏற்படுத்தப்பட்டன. இஸ்ரவேல் ஜனங்கள் தத்தம் மனப்போக்கின்படி நடந்து, விக்கிரக ஆராதனைக்காரராகச் சீவித்தபோது சர்வேசுரன் மோசேஸ் வழியாகக் கற்பனைகளைக் கொடுத்தார். இக்கற்பனைகளுடன் இறைமக்கள் நியாயப் பிரமாணத்தின்படியும் சீவித்து வந்தனர் என்பதையும் நாம் அறிவோம். பத்துக் கற்பனைகளை அன்பின் கற்பனைகளாக்கிய நம் அன்பின்

— நாதன் —

மீட்பராம் யேசுநாதரே, "நியாயப்பிரமாணங்களையும் தீர்க்க தரிசனங்களையும், அழிக்கவல்ல நிறைவேற்றவே வந்தேன்" என்றார்.

ஆகவே, அவரது தெய்வீக அன்பை விளங்கிய நீதிமான், தீமையைவிட்டுவிலகி, நம் பரலோக பிதாவைப்பற்றிய பரம அன்பினால், எவ்வித பாவத்தையும் வெறுத்து, கடவுளின் தண்டனைக்குப் பயந்து அல்ல, அவர் தன்னிடத்தில் இருந்து பேசிக்கொண்டிருக்கும், நல்ல மனச்சாட்சி என்னும் இறைவனின் ஏவுதல்படி, நீதியாய் நடக்கிறான். இதைப் பற்றி பரி. இராயப்பர் என்ன சொல்கிறார். (பரி. இரா. 3-ம் அதி. 12-ம்வச.) "ஆண்டவருடைய கண்கள் நீதிமான்கள் மேலும், அவருடைய செவிகள், அவர்களுடைய செபத்தின்மேலும், நோக்கமாய் இருக்கின்றன. ஆனால் தின்மையைச் செய்கிறவர்கள் மேல், ஆண்டவர் கோபமாய் இருக்கிறார்" என்று கற்பனையின் அவசியத்தை விளக்குகிறார். புனித அருளப்பர் இதைப்பற்றி, தமது 2-ம் நிருபம், 3-ம் அதி. 3-ம், 4-ம வசனத்தில், நாம் அவருடைய கற்பனைகளை அனுசரித்தால், அவற்றின்வழியாகவே அவரை அறிந்திருக்கிறோம் என்பது நமக்குத் தெரியும். நான் அவரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் காக்காதவன் பொய்யன், சத்தியமும் அவனிடத்தில் இல்லை" என்று வெகு சுட்டிப்பாய் விளக்குகிறார். இறைவனது வல்லபத்தை, மகிமையை, பரிசுத்ததனத்தை விளக்குவது அவரது கற்பனைகளே. அவரது கற்பனைகளைச் சட்டவட்டமாக அனுசரித்து, அவரது ஜீவன் தரும் வார்த்தைகளைத் தேடி அறிந்து, அதன்படி நடக்கிறவனிடத்தில், மெய்யாகவே தேவசிநேகம் நிலைத்திருக்கிறது. அவன் அவரிடத்தில் அசைவின்றி நிலைத்திருக்கிறான். எவ்வித பூசலும், புயற்காற்றும் அவனை அலைக்கழிக்க முடியாது. அந்த அன்பின் இறைவனும் தமது வார்த்தையை மீறுதபடி அவனுள் வந்து வாசம்பண்ணுவார். அவனோ அவரை விட்டுப் பிரியாது, அவரைப் பிரியப்படுத்தும்படி அவர் சித்தத்துக்குத் தன்னைக் கையளித்து, அவர் காட்டிய பாதையில் நடக்கத் தெண்டிக்கிறான். அவரது அன்புக்கரம் அவனை அரவணைத்து நேரிய பாதையில் இட்டுச் செல்கிறது. அவனோ உலகைவெறுக்கிறான். உலகைச் சிநேகிக்கிறவர்களின் கண்களுக்கு குணமான போதகங்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன என்று புனித அருளப்பர் எழுதுகிறார். தேவனை நேசிக்கிறவர்களுக்கோ அவர் வெளிச்சத்தைக் கொடுத்து, மேலும் மேலும் அவன் விசுவாசத்தில் ஸ்திரம் அடையச் செய்கிறார்.

ஒரு மனிதன், பரிசுத்ததனமும், நல்மனச்சாட்சியும் ஒன்று சேரும்போது கற்பனைகளை அனுசரிப்பதில் இயல்பாகவே விருப்புண்டாகி, பாசாங்கற்ற விசுவாசத்தை உண்டாக்குகிறது. இவ்விசுவாசம் அவரிடத்தில் பிள்ளைக்குரிய நம்பிக்கையைப் பிறப்பித்து பரம அன்பில் ஒன்றிக்கச் செய்கிறது. அப்போது அவரிடத்திலிருந்து வழிந்தோடும் அந்த பரமஅன்புக கொடையாகிய சீவசலத்தை அவனும் பெற்று, தூயஆவியானவரின் துணையால் பிறர்சிநேகக் கற்பனையாகிய சீவ ஜலமாக மாற்றி, பிறரை மகிழ்விக்கிறான். இதுவே கிறீஸ்தவ சட்டங்களின் கதியாகிய தூய இதயத்திலும், நல்மனச்சாட்சியிலும், விசுவாசத்திலும் ஆகிய பரம அன்பாம்.

---

செல்வன் ஜோசவ் இராஜேந்திரன் தேவசகாயம்
மருதமடுப்பதியில்
மரணத்திரையில் மறைந்த

## 15-ம் வருட நினைவு தினம்

தோற்றம்: 29-12-1943. மறைவு: 6-9-1955

சர்வேசுரன் கொடுத்தார்; சர்வேசுரன் எடுத்துக்கொண்டார்; ஆண்டவருக்குப் பிரியமானது நிறைவேறியது. அவரின் திருநாமம் வாழ்த்தப்படக் கடவது. —யோபு 1—2

என்றும் மறக்கமுடியாத எம் அருமைப்புதல்வரும் எம் சகோதரனுமாகிய யோசவ் இராஜேந்திரன் தேவசகாயம் மரணமான 15-ம் வருட நினைவு தினம் 6-9-70-ல் பூர்த்தியடைவதால் மறுநாள் 7-9-70 திங்கட்கிழமை காலை அவரது ஆன்மசாந்திக்காக கொழும்பு முகத்துவாரம் புனித ஸ்நாபக யுவானியார் கோவிலிலும், மருதமடுப்பதி [illegible]

---

# அற்புதமாதா கியுறியா பரஸ்பர உறவுச் சம்மேளனம்

நீர்கொழும்புப் பகுதி மரியாயின் சேனை அற்புதமாதா கியுறியாவைச் சேர்ந்த சேனையாளர் 23-8-70-ல் தமது வெளிவிழாவாக 'பரஸ்பர உறவுச் சம்மேளன'மொன்றைத் தோப்புக் கன்னியர் மடத்தில் மிக விமரிசையாக நிகழ்த்தினர்.

சம்மேளனம் தூயஆவியானவர் கீதத்துடனும், ஆரம்ப செபம், செபமாலையுடனும் ஆரம்பமாயிற்று. கியுறியாத் தலைவர்: சகோதரர், பிரான்சீஸ் ஜோசவ் அவர்கள் தமது ஆரம்பவுரையில் சம்மேளனத்தின் நோக்கம் பற்றிக் கூறியதுடன், சமுகமளித்தோரைப் பரிவுடன் வரவேற்றார். இச்சம்மேளனத்தில் வளர்ந்தோர் பிரஸீடியங்களும், பாலர் பிரஸீடியங்களும் பங்குபற்றின.

வண. பிதா ஜோசவ் வாஸ், அ. ம. தி. 'மரியாயின் மகிமை' பற்றிப் பேசுகையில், சேனைத்தலைவி மரியாயின் அதியுன்னத வல்லபங்கள்பற்றியும், அருள்நிறைமை பற்றியும் கூறலானார். 'மரியாயின் சேனையும்—மரியாயும்' என்ற விடயம்பற்றி வண. பிதா பிலிப் சிங்கராயர் அ. ம. தி. (O. M. I.) நல்லுரையாற்றியதுடன், இத்தகைய சம்மேளனங்கள் வழியாகச் சேனையாளரிடையே நல்லுறவை வளர்க்கலாம் எனவும் கூறலானார்.

சேனையாளர்க்கென விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படலாயிற்று. மதிய போசனத்தின் பின்னர் சதா சகாயமாதா பிரஸீடியத் தலைவர்: சகோதரர், வ. ஜோஜ் பெர்னண்டோ, 'மரியாயின் சேனையும், திருச் செபமாலையும்' என்ற விடயம்பற்றிப் பேசுகையில் திருச்செபமாலையின் வரலாறு, வளர்ச்சி, வல்லபங்கள், வணக்கமுறை பற்றியும், 'சைனியங்கட்குத் திருச்செபமாலை வல்லபமிக்கதோர் ஆயுதமாகு' முறை பற்றியும் விளக்கலானார். ஒவ்வோர் உபந்நியாசத்தின் பின்னரும், உரையாடல் இடம் பெறலாயிற்று. இறுதியாக 'அற்புதமாதா கியுறியா கூட்டம்' நடாத்தப்பட்டு, நன்றியுரையுடனும், ஞானமேய்ப்பரின் ஆசீர்வாதத்துடனும் சம்மேளனம் சபாப்தியாயிற்று.

— நிருபர்.

---

# முதலாவது கம்யூனிஸ்தநாடு

வத்திக்கானும் கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்த நாடுகளில் ஒன்றாகிய யூகோசிலேவியாவும் தங்களிடையே திரும்பவும் பூரண இராசிய உறவை ஏற்படுத்தியுள்ளனவென்று தெரிவித்திருப்பதாக வத்திக்கானிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை செய்தி கிடைத்திருக்கிறது இது செயல் எதிர்காலத்திலே வத்திக்கானுக்கும், ஏனைய கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்த நாடுகளுக்குமிடையே இராசிய உறவுகள் திரும்பவும் ஏற்படுவதற்கு அடிகோலுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தாலே இரு நாடுகளுக்குமிடையில் கடந்த 18 ஆண்டுகளாக உண்டாயிருந்த இராசிய உறவின் முறிவு இப்போது முடிவடைந்திருக்கிறது. அதனால் யூகோசிலேவியாவே வத்திக்கானுடன் இராசிய உறவைத் திரும்பவும் ஏற்படுத்தியுள்ள முதலாவது ஐரோப்பிய கம்யூனிஸ்த நாடாகின்றது. பரிசுத்தஸ்தானத்துடன் இராசிய உறவை ஏற்படுத்தி ஸ்தானிகர்களை பரிமாறியுள்ள மற்ற ஒரேயொரு கம்யூனிஸ்தநாடு கியுபாவே:

வத்திக்கானுக்கும், யூகோசிலேவியாவுக்குமிடையே இருந்துவந்த இராசியஉறவு 1952ஆம் ஆண்டு முடிவடைலாயிற்று. அப்பொழுது, யூகோசிலேவியாவிலுள்ள சாகிறெப்நகர் அதிமேற்றிராணியாரும், ஒரு யுத்தகுற்றவாளியாக யூகோசிலேவிய அரசாங்கத்தால் தண்டனை விதிக்கப்பட்டுச் சிறைவாசஞ் செய்திருந்தவருமான காலஞ்சென்ற அலோய்ஸ் ஸ்ரிபினக் ஆண்டகை அப்போதிருந்த 12-ம் பத்திநாத பாப்பானவரால் கருதினால் பதவிக்கு உயர்த்தப்பட்டமையே அம்முறிவுக்குக் காரணமாகும்.

ஆயினும் 1966ஆம் ஆண்டு—அதாவது 14ஆண்டுகளின் பின் செய்யப்பட்ட ஓர் உடன்படிக்கையின் பேரில் இந்த இராசிய உறவு ஓரளவில் திரும்பவும் ஏற்பட்டு, அதனால் இருநாடுகளும் இராசிய தூதுவர்களைப் பரிமாறிக் கொள்ள முடிந்தது: இதன் மூலம் யூகோசிலேவியாவில் கத்தோலிக்க திருச்சபைக்கு அதிக சுதந்திரம் கிடைத்தது. அதுவும் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் திருச்சபை தலையிடப்படாதென்ற உறுதிவாக்கின் பேரிலேயாகும்.

பூரண இராசிய உறவு அந்தஸ்துக்கு வழிபண்ணுவதா

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

---

## நன்றி உடையேன்

எனது மருமகளின் சுகமான குழந்தைப் பிரசவத்துக்குச் சதாசகாயத் தாயிடம் வேண்டிக் கொண்டேன். எனது மன்றாட்டுக் கேட்டுக்கொள்ளப்பட்டது. தாயும், சிசுவும் நலமே உள்ளார்கள். சதாசகாயத்தாயின் கருணைக்கும், அன்புக்கும் நன்றியுடையேன்.

எஸ். பிரான்சிஸ்.

நுவரேலியா, 106/70.

---

கண்ணுறுவோர் இவருக்காக மன்றாடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்

பெற்றோர், சகோதர சகோதரிகள்.

69/18 இராஜமல்வத்தவீதி

கொழும்பு, 15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருமடத்தில் சேர்ந்திருக்கும் அருமைப் புதல்வனுக்கு

தோமஸ், என்மகனே இன்று காலை என் அலுவலகத்திற்குச் செல்ல ஆயத்தமான போது உன் கடிதம் என் கைக்கெட்டியது. அதைப் பிரித்து ஆர்வத்துடன் படித்தேன். அதற்கு என்ன பதில் எழுதுவதென அறியாது திகைத்தேன். இன்று பகல் முழுவதும் அதைப் பற்றியே சிந்தித்தேன். கடைசியாக இதை வரைகிறேன். மகனே, நீ பிறந்தநாள் இப்பொழுது என் நினைவில் வருகிறது. நானும், உன் தாயும் நெடுநாள் பிள்ளைப் பாக்கியமில்லாது வருந்தினோம். அதனால் செய்யாத நேர்ச்சியெல்லாம் செய்தோம், கையெடாத கோவிலெல்லாம் கையெடுத்தோம். தவங்கிடந்தோம், தானதருமம் வழங்கினோம். கடைசியாகக் கிறிஸ்தவர்களின் சகாயமாகிய மரியன்னையின் திருசேத்திரத்திற்கு யாத்திரை செய்தோம். எங்களுக்குப் பிள்ளைவரம் அருளுமாறு இருவிழிநீர் பெருக அழுதழுது மாதாவை இரந்து மன்றாடினோம். இந்த வரம் கிடைக்குமிடத்து அந்தப் பிள்ளையை இறைவனுக்கே அர்ப்பணஞ் செய்வதாக வாக்களித்தோம்.

ஆம், மாதாவின் அருளால் அந்தப் பெரும் பாக்கியத்தை நாம் அடைந்தோம். புனித ஜூசையப்பரின் மருத்துவமனையில் நீ பிறந்தபொழுது, நாம் அகமகிழ்ந்தோம். இறைவனுக்கு நன்று செலுத்தினோம். அதுமுதல் எமது இதயமெல்லாம் கொண்டு உன்னை நேசித்தோம். கண்ணேபோல் உன்னைக் கருத்தாகப் பாதுகாத்து வளர்த்தோம். சாதாரணமாக ஒரு பிள்ளைக்குப் பெற்றோர் அளிக்கும் கல்விப்பயிற்சியை நாமும் உனக்களித்தோம். எல்லாத்துக்கும் மேலாய் நீ இறைவனை நேசிக்கும்படி இயன்றமட்டும் பிரயாசை எடுத்தோம். நாம் நீ சிறு பாலியனாய் இருந்தபோது பூசைகாண உன்னையும் கொண்டுசென்றோம். அங்கே நாம் திவ்விய நன்மை பெறப் போகும்போது, நாம் போகும் வரை காத்திருந்து, பின்னர் எம்மைப் பின்தொடர்ந்து, திருப்பீடம்வரை வந்து முழந்தாளிட்டிருப்பாய். ஆனால், சுவாமியார் உனக்குத் திவ்விய நன்மை தரவில்லை என்பது ஒருகால் உன் ஞாபகத்தில் இருக்கலாம். அப்போது நீ பெறுவதற்குப் போதிய வயதில்லாது அதிகம் சிறியவனாய் இருந்தாய். அதனால்தான் அவர் உனக்கு அதைத் தரவில்லை. சிலவருடங்கள் சென்றதும் நீ முதன்நன்மை பெற்றாய். அந்தப் பாக்கியமான தினமும், அன்று நிறைவேறிய திவ்விய பூசையும், அதை நிறைவேற்றிய சுவாமியாரின் பெயரும், பின்னர் உன்னை நடுவிடமாகக்கொண்டு எடுக்கப்பட்ட ஞாபகார்த்த பிரதிமைப்படமும், அன்றைய பெருவிருந்தும் இன்றும் உன் நினைவில் இருக்கலாம்.

அவ்வாறாக, எமக்குச் சடுதியாக ஒருபெருங் கெடுதி ஏற்பட்டது. அதனை நினைக்கவே இப்போதும் என் நெஞ்சம் திக்கிடுகின்றது. மின்னாதிருக்க, முழங்காதிருக்க, எண்ணாதவிதமாய், ஆருமே எதிர்பாராதவிதமாய் ஒருநாள் உன் அன்புத்தாய் திடீரென நோய் கண்டு பாயும் படுக்கையுமாக வீழ்ந்தாள். அந்தப்படுக்கை உனது அன்னைக்கு மரணப் படுக்கையாகி மூன்றாம் நாள் மரணத்திரையில் மறைந்தாள். அப்பொழுது அதிகமாகப் புலம்பியழுதது, பிரலாபித்தது நீயோ, உன் சின்னச் சகோதரி வலேரியோ, அன்றேல் நானோவென்பதை யான் அறியேன். அத்தால் எமது இருதயம் நொறுங்குண்டது. இல்லம் இருள் சூழ்ந்ததாயிற்று. அதனால் உண்டான மனப்புண் ஒருபோதுமே ஆறாதிருந்தபோதிலும், சேமக்காலையிலிருந்து நாம் திரும்பி வந்து அன்னையின்றியே எமது வாழ்க்கையை ஆரம்பித்ததிலிருந்து இதுவரை அநேக வருடங்கள் சென்றுவிட்டன.

"எம் செல்லமகனே, நீ எம் குலவிளக்கு. எமது குடும்ப விளக்கு. பெருமை வாய்ந்த எம்முன்னோரின் சந்ததியையும், அருமையான உன் தாய் தந்தையரின் பெயரையும் விளக்கவந்த ஒரே கலங்கரை விளக்கு. அதனால் அந்த விளக்கு அணைந்துபோக விடாது, உன் எதிர்கால வாழ்க்கைபற்றி எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினேன். கட்டாத கோட்டையெல்லாம் கட்டினேன். நீ ஒரு வைத்திய கலாநிதியாகவந்து, நோயாளரைப் பரிகரித்து, அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும். அன்றேல் உன் தந்தையைப்போல சிறந்த ஓர் எழுத்தாளனாக வந்து பெயர்புழங்கவேண்டும், அல்லது நீ இளமையிலே ஆகாயவிமானங்களைக்கட்டி விளையாடியதை நினைந்து நீ ஒரு சிறந்த விமானியாக வந்து பெயர்விளங்க வேண்டுமென்றெல்லாம் மனப்பால் குடித்து வந்தேன். ஆனால், இன்று வந்த உன் கடிதத்தை ஆதிமுதல் அந்தம்வரை ஆறியமர்ந்து படித்ததே என மனக்கோட்டையெல்லாம் எவ்வாறு மணற்கோட்டையாயிற்று, எனது எண்ணமெல்லாம் எவ்விதம் ஊமைகண்ட கனாப்போலாயிற்றென்று எண்ணியகால் என்கண்கள் கலங்கின. கலங்கிக் கண்ணீர் சிந்தின."

> "என் செல்வ மகனே, நீ எம் குலவிளக்கு, எமது குடும்ப விளக்கு; பெருமை; வாய்ந்த எம் முன்னோரின் சந்ததியையும், அருமையான உன் தாய்தந்தையரின் பெயரையும் விளக்க வந்த ஒரே கலங்கரைவிளக்கு அதனால் அந்த விளக்கு அணைந்துபோக விடாது உன் எதிர்கால வாழ்க்கைபற்றி நானும் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினேன், கட்டாத கோட்டையெல்லாம் கட்டினேன். ......ஆனால் இன்றுவந்த உன் கடிதத்தை ஆதிமுதல் அந்தம் வரை ஆறியமர்ந்து படித்ததே என் மனக்கோட்டையெல்லாம் எவ்வாறு மணற்கோட்டையாயிற்று, எனது எண்ணமெல்லாம் எவ்விதம் ஊமைகண்ட கனாப் போலாயிற்றென எண்ணியகால் என் கண்கள் கலங்கின; கலங்கிக் கண்ணீர் சிந்தின."

— "ஞானம்" —

என் அருமைப் புதல்வா, நான் உலகப்போக்கிலே உன் எதிர்கால வாழ்க்கையைச் சிறக்கவைத்து, உன்னையும் ஒரு மனிதனாக விளங்கச் செய்ய வேண்டுமென்று இரவு பகல் இதே எண்ணமாய் இருந்துவருகையில், நீயோ ஞானப்போக்கிலே அன்று தினம் என்முன்பாகவந்து முழந்தாளிலிருந்து, இரண்டு கையுமெடுத்து, "தந்தாய், நான் ஒரு குருவாய்வர அனுமதிதர வேண்டுமென மன்றாட்டமாய் என்னைக்கேட்டபோது அவ்விதம் என்னைக் கேட்பாயென்று நான் கனவிலேதானும் ஒருபோதும் காத்திருக்கவில்லை. மகனே, உள்ளதைச் சொல்ல என்னுள்ளம் பின்வாங்குகிறது. அதாவது, நீ என்னிடம் அனுமதிகேட்ட மறுதினம் நீ கல்விச்சாலை சென்றபின் நான்மட்டும் தனிமையாயிருந்தேன் அல்லவா?

அப்பொழுது, திருஇருதய நாதரினதும், கிறிஸ்தவர்களின் சகாயமாகிய மரியன்னையினதும் திருவுருவப்படங்கள் சிம்மாசனம் வகுத்திருக்கும் எமது அறைக்குள் மெதுவாகச் சென்று, நெடுமுழந்தாளிட்டு, நீ ஒரு குருவாகுவதற்கு ஆவசியகம்வேண்டிய திருவருளை உனக்கு அருளவேண்டுமென்றும், உன்னை இறைவனுக்கே அர்ப்பணஞ் செய்வதாக அப்போது நாம் அளித்த வாக்கை இந்நாள்மட்டும் அறவே மறந்துவிட்ட என்பிழையைப் பொறுத்தருள வேண்டுமென்றும் உருக்கமாக இரந்து மன்றாடினேன். இப்பொழுது இறைவனின் அனுக்கிரகத்தால் யாவும் கைகூடியது. நீயும் குருமடத்தில் சேருவதற்காகச் சென்றவாரம் எம்மை விட்டுப் பிரிந்துசென்றாய்.

என்மகனே, கடந்த காலங்களில் நான் உன்னோடெல்லாம் காணாத பல காட்சிகளைக் கண்டிருக்கிறேன். மகிழ்ச்சிகரமான அநேக நிகழ்ச்சிகளைக் கண்டிருக்கிறேன். ஆனால், நீ குருப்பட்டம் பெற்று முதற்பூசை நிறைவேற்றும்போது, உன்னை என் மனங்குளிரக் கண்டுகொள்ளவும், உனது கரங்களால் திவ்விய யேசுவைப் பெற்றுக்கொள்வான் பலிபீடத்தை அணுகிவரவும் இறைவன் திருவருள்பாலிப்பாரானால், அஃதுதான் எனது வாணாளில் கண்ட மாபெரும் காட்சியாகவும், மகிழ்ச்சிகரமான மாபெரும் நிகழ்ச்சியாகவும் இருக்குமென நான் நிச்சயமாயிருக்கிறேன். ஆயினும் இந்தக் கௌரவத்திற்கு உலகி... [illegible] தப்பண்மாருக்கு ஒருவர்விகிதம் தான் தெரிந்தெடுக்கப்படும் போதிலும் இந்தமகத்தான பதவிக்கு நான் ஒருபோதுமே அருகனல்லன். அதற்கு என்னை அருகனாக்க வேண்டுமென்றே இறைவனின் திருப்பாதகமலங்களை இரந்து நிற்கின்றேன். மகனே, இந்த வேளை புனித ஜோன் பொஸ்கோ கூறிய சுகிர்த மொழிகள்–அதாவது– "இறைவன் ஒரு குடும்பத்துக்கு அருளும் மாபெரும் கொடை ஒரு குருப்பிரசாதியே" என்ற புனிதமொழிகள் என்செவிகளில் இன்பகானஞ் செய்கின்றன.

ஒருநாள் உனது தந்தையும் உன் தங்கை வலேரியும் உன்னுடைய ஆசீர்வாதத்தை வேண்டி உன்முன்பாக முழந்தாட்படியிடுவார்கள். அப்பொழுது நாம் அடையப்போகும் பேரானந்தத்தையும், சிந்தப்போகும் ஆனந்தக் கண்ணீரையும் இப்பொழுது நினைக்கும்போதே எனது கண்கள் இரண்டும் கலக்கம் எய்துகின்றன. மகனே, இறைவன் உன்னை இதயபூர்வமாக ஆசீர்வதிப்பாராக. சுபம்!

## பிறந்த நாள்

—( பாக்கியம் )—

உலகினில் மனிதன் உதிக்கின்றான்
உண்மையில் அதுவும் பெருநாளே
பலபல மனிதன் பிறக்கின்றான்
பண்பையும் பரிவொடு படிக்கின்றான்
கலகலப் பாகச் சிரிக்கின்றான்
கண்ணினால் பலவற்றைக் காண்கின்றான்
சிலசில அவன்கண் மறைவதில்லைச்
சித்திரம் வடித்தாற் போலாமே.

* * *

இன்றெனில் இருபத்தி ஒன்பதையே
இலகினில் நானும் அடைந்துவிட்டேன்
அன்றெனில் சிறியனாய் இருந்தநானும்
அன்பினில் ஊன்றித் திளைத்துவிட்டேன்.
கன்றெனில் வளர்ச்சி அடைவதுபோல்
கருத்தினை அளவாய்ப் பெற்றுவிட்டேன்
குன்றெனில் திண்மை பெறுவதுபோல்
குவலயம் ஆண்மை அடைந்துவிட்டேன்.

* * *

இந்தநன் நாளில் கடவுளுக்கே
இருகரம் கூப்பி நன்றிசெய்வேன்
சொந்தமாய் என்னை ஆக்கியதைச்
சொல்லினால் எப்படி வருணிப்பேன்!
பந்தய ஓட்டம் ஓடுறேன்நான்
பாரினில் பரமனை அடைவதற்கு
இந்தஎன் ஆவலைப் பூர்த்திசெய்ய
இறைவன் தனதருள் தருவாரே.

* * *

கடந்தஇவ் ஆண்டைப் பார்க்கையிலே
கடவுள் எத்தனை தந்திட்டார்!
நடந்தஎன் வியாதியை நினைக்கையிலே
நலிவினில் பலத்தைத் தந்திட்டார்
விடந்தரும் மருந்து வியாதியையே
விரைவினில் குணமாக் கிடுமாமே
படந்தரும் கருவி படத்தினையே
பணத்திற்குத் தருவது போலாமே.

* * *

பாவினால் பாட முடியாதையா
பரமன் கொடுத்த கொடைகளையே
நாவினால் நவில நேரமில்லை
நலங்களைத் தந்திட்ட இறைவனையே
கோவினால் செயற்கரும் கருமங்களைக்
கொள்ளையாய் எனக்குத் தந்திட்டார்
ஏவினால் பாவம் வந்தாலும்
என்னையே மீட்டு இரட்சித்தார்.

## லூத்தேர் சபையினரின் ஆவே மறியா கீதம்

சுவீடன் நாட்டின் தலைப் பட்டணமாகிய ஸ்ரொக்கோம் நகரிலிருந்து சமீபத்தில் றோமைநகர் சென்றிருந்த லூத்தேர் புரொட்டஸ்தாந்த கிறிஸ்தவர்களின் குழு ஒன்று பாப்பரசரின் வேனிற்கால வாசஸ்தலமாகிய காஸ்டல்போ சென்று அவரின் வாராந்த பேட்டியில் கலந்து அவர் முன்பாக "ஆவேமறியா" எனும் கீதத்தை லத்தீனில் பாடியது. அவர்களைப் பாப்பரசர் தாமே அங்கு பிரசன்னமாயிருந்த 10,000 யாத்திரிகர்களுக்கும் அறிமுகஞ் செய்து வைத்தார். அதன்மேல் அவர் பேசியபோது, "நாம் இன்னும் பூரண ஒற்றுமையிலே பங்குபெறாத போதிலும் அவர்கள் நாம் நேசிக்கும் நம்முடைய சகோதரர்களே" என்று அன்பு பாராட்டி அவர்களுக்கு நன்றி கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் கடவுள்?

(பீ. ஜே. அமிர்தநாயகம்)

ஏன் கடவுள்? என்ற வினவிற்கு......

கடவுள் நித்திய நன்மைத்தனமும், சம்பூரண ஐக்கியத்தின் காரணமும், பேரின்ப விருந்தும், தெவிட்டாத இன்பத்தை அளிக்கும் சமாதானத்தின் காரணமுமாய் இருக்கிறார் என்பதே விடையாகும்........

இதைச் சற்றுச் சிந்திப்போமாக.

## நித்திய நன்மைத்தனம் அவரே!

தூய அரூபியான தேவன் அவரே! நித்திய பரமானந்தமும் அவருடையதே. என்ன காரணத்திற்காக அவர் மாமிசமானார்? அவரின் அன்பின் பெருக்கு அவரின் சாயலை அளவில்லாது பெருக்கியது.... அவரின் பரமானந்தத்தைப் பலனுள்ள வெள்ளமாக ஓடவிடச் சித்தமானார். என்ன அதிசயம்! ஆம் ஒவ்வொரு மனிதனும் கடவுளின் பரிசுத்த சாயல். கடவுளில் உற்பத்தியான பிள்ளை. என்ன பெருமை! என்ன மகிமை!! அன்பின் பெருக்கை வெளிப்படுத்தவே தேவன் மனிதனானார். வார்த்தையானவர் மாமிசமானார். மறைந்திருக்கும் தேவன் வெளிப்படையானார். அவர் நித்திய பராமரிப்பின் சம்பூரணம். நல்லாயனுக்குச் செவிசாய்த்த செம்மறியை நல்ல மேய்ச்சல் நிலத்திற்கு வழி நடத்தும் அன்பர் அவரே. ஓநாய்களின் வாயில் அகப்படாது இடைவிடாது விழிப்பாய்த் தன் மந்தையைப் பாதுகாக்கும் இடையனும் அவரே. தனக்குப் பேரின்பமளிக்கத் தக்க புனித உருவங்களைத் தன தன்பால் உருவாக்கும் ஞானச்சிற்பியும் அவரே. மாமிசமான தேவன் அதை எல்லா நிலைகளிலுள்ளவர்களும் பெற்றுக்கொள்ளச் சித்தமானார்.

அது திருச்சபையின் மூலைக்கல்லான பேதுருவாய் இருக்கலாம். அல்லது தேச வரம்புகளைத் தாண்டி உழைத்த இந்தியாவின் மங்காச் சுடரான சவேரியாராய் இருக்கலாம். ஈருடலும் ஓர் உயிருமாகத் தேவ சித்தத்திற்கு ஒன்றித்து அடிபணிந்து வாழ்ந்து யேசுவின் முன்னோடியை ஈன்றளித்த சக்கரியாஸ் தம்பதிகளாயிருக்கலாம். யேசுவின் பாத்திரத்தை உட்கொண்டு மோட்சத்திலும் தங்கள் சகோதரத்துவத்தை ஞானவிதமாய் ஐக்கியப்படுத்திய யாகப்பர் அருளப்பராயிருக்கலாம். இவ்வுலகில் யேசுவுக்கு இன்பமளித்து நித்தியத்திலும் அவரின் பரமானந்தத்திற்கு உரித்தாளிகளான லாசரசின் சகோதரிகளாயிருக்கலாம், அவர்கள் தாயும் சேயுமாயிருக்கலாம், தாயின் தபக்கண்ணீரால் புனிதனுக்கப்பட்ட சேய்க்கு புனித அகுஸ்தீனூரும் மொனிக்கம்மாளும் உன்னத எடுத்துக்காட்டாகும். வார்த்தையானவர் மாமிசமானார். ஏனெனில், அவரின் சாயலாகிய சகல மாமிசமும் வார்த்தையாவதற்கே. என்ன அதிசயம்! என்ன மகிமை!!

## நித்திய ஐக்கியமும் அவரே!

நாம் வணங்கும் கடவுள் நமக்கு உள்ளேயா அல்லது வெளியேயா? அவர் நம்மை ஆட்கொண்டுவிட்டாரா? அல்லது ஓர் அழகான கற்சிலை போல் கண்ணுக்குமாத்திரம் காட்சியளிக்கிறாரா? அவர் எப்போது நம்மைப் பூரணமாக ஆட்கொண்டாரோ அப்போதுதான் அவர் நமது கடவுள் (கட + உள்) எல்லாம் வல்ல தேவன் அவரே. ஆதியும் அந்தமும் அவரே. எல்லாவற்றையும் கடந்தவரும் அவரே. எல்லாம் வல்லதேவன் எல்லாவற்றிலும் நிறைந்திருக்கிறார். ஆனால் மனிதனிலோ அவர் அன்புடன் ஆட்சிசெய்கிறார். ஏனெனில் மனிதன் அவரின் சிறந்த சாயல். நாம் அவர் மயமாகாவிட்டால் எப்படி அவர் நமக்குள்ளே எனக் கூறலாம்? அவரின் அன்பின் ஆட்சிக்குள் வர யார்தான் விரும்பாதிருப்பார்கள்? தேவ அன்பிற்கு யார்தான் எல்லை போடுவார்கள்? அவரின் மகத்துவம் எல்வளவு மனிதனுக்கு அப்பாற்பட்டதாயினும் அவர் தனியாவிடாயுடன் நமக்குள்ளே வசிக்க விரும்புகிறார். புனித கபிரியேல் தேவதூதனின் மங்கள வார்த்தைக்கு புனித மரியாள் "இதோ ஆண்டவரின் அடிமை" என்று பூரணமாகத் தன்னை அளித்த மனப்பான்மை உள்ளவனே மெய்யாகக் கடவுளை ஏற்றுக்கொள்ளுகிறான். அவன் கடவுளிலும் கடவுள் அவனிலும் இருப்பது சத்தியம். இப்போது அவன் தன்னை நடத்தவில்லை. கடவுளே அவனை நடத்துகிறார். தேவனுடைய ஆவியும், சர்வவல்லமையும், நன்மைத்தனமும், அவனை உந்துகிறது. அவன் கடவுளை உண்மையாக பிரதிபிம்பிக்கிறான். அவனில் கடவுளை எல்லோரும் காணக் கூடியதாயிருக்கிறது. அவன் ஒருவருக்கும் துன்மாதிரிகையாக இருப்பதில்லை. விசுவாசி கடவுளின் உன்னத காட்சி. கடவுளுக்கு அவனே சாட்சி. பரமபிதா அவனில் கிறிஸ்துவையும் கிறிஸ்துவில் அவனையும் காண்கிறார்.

## நித்திய விருந்தும் அவரே!

பங்கிடுதல் அன்பின் பிரதான இலட்சணம். நண்பர் தங்களுக்கிடையில் வேற்றுமை காட்டமாட்டார்கள். கவலையிலும் துன்பத்திலும் கலந்துகொள்வார்கள். அன்பு பகிர்ந்து கொடுக்கிறது. நன்மைத்தனமா பிருக்கிறது அன்பு. அன்பே கடவுள் என்கிறோம். கிறிஸ்துவாகிய அன்பையே கிறிஸ்தவன் பரிமாறுகிறான். அவை உலக செல்வங்களாய் இருக்கலாம்; ஞானச் செல்வங்களாய் இருக்கலாம். ஞான, உலக செல்வங்களில் அனாதைகளாகவும் விதவைகளாகவும் அனேகர் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவராயும் வியாதிக்காரராயும் இருக்கிறார்கள். வாழ்வை அளிக்கும் தன் அன்பின் கரங்களால் தேவன் எல்லோரால் எல்லோரின் தேவைகளைப் பூர்த்தி பண்ணுகிறார் அவரே நித்திய பராமரிப்பு. அவரே பூரண அன்பின் நல்ல ஆயன். கிறிஸ்து தான் கல்வாரியில் பலியாகுமுன் தனது இராப்போசனத்தில் தன்னை ஒரு பெரிய விருந்தாளியாகக் காட்டினார். விருந்தும் விருந்தாளியுமாகிய கிறிஸ்துவின் அங்கங்களாகிய நாம் எப்படி ஒருவர் ஒருவரை நேசியாதிருக்கலாம்? உலக செல்வங்களையும் ஞானச் செல்வங்களையும் மென்மேலும் அதிகரிக்கச் செய்வோம். ஆனால் அவைகளைத் தனது சகல மக்களுக்காக கைகளைவிரித்துப் பாடுபட்ட கிறிஸ்துவைப் பின்பற்றி எங்கள் கைகளையும் விரித்து எல்லோருக்கும் பரிமாறுவோம். அப்பொழுதுதான் நித்திய சம்பாவனையாகிய தேவனில் சகல சம்பாத்தியமும் பூரண பூர்த்தியடையும். அன்றேல் பலன்கொடாத மரம் போல் வெட்டுண்டே அக்கினியில் போடப்படுவோம்.

## நித்திய சமாதானமும் அவரே!

இரு பெண்களுக்கிடையே சண்டை! யாருக்கு முதலிடமென்பதே பிரச்சனை!! யார் செய்தது உத்தமமானது? தீர்ப்புச் சொல்வது யார்? சலமோனா? இல்லை. சலமோனிலும் மேலானவர். அவர் சலமோனின் தேவன். லாசரசின் வீடு அது. கிறிஸ்து அவர்களின் உறவை அதிகம் விரும்பினார். பலதடவைகளில் அவர் அங்கே வருவதுண்டு. கிறிஸ்துவுக்குச் சேவை செய்வதில் அங்கு போட்டி. மரியாள் கிறிஸ்துவின் பாதத்தில் இருந்துகொண்டே இருந்தாள். கிறிஸ்து அளிக்கும் பரமானந்தத்தை ரசித்துக்கொண்டே இருந்தாள். அவள் பூரண பரவசமானாள். மார்த்தாளோ ஓடி ஆடி மிகவும் துரிதமாக உழைத்தாள். அவ[illegible] லாயே இருந்தாள். கிறிஸ்துவுக்கு முறையிட்டாள் மரியாள். எல்லோரினது நித்திய சாந்தியும் சமாதானமுமாகிய கிறிஸ்து எப்படித் தீர்ப்புக் கூறுதிருக்க முடியும். ஞானக் காரியங்களும் ஞானக்கடமைகளும் என்றும் முதலிடம் பெறவேண்டும். உலக காரியங்களும் உலக கடமைகளும் அதன் பின்னேதான். செல்வத்துட் செல்வம் அன்பே என்று தீர்ப்பளித்தார் தேவன். இருவருக்கும் வெற்றி. ஆனால் முதலிடம் மரியாளுக்கே. "ஒன்றுதான் அவசரம்" என்று திருவாய்மலர்ந்தருளினார் நித்திய அன்பாகிய யேசு. இன்றும் என்றும் உலகம் தாமுடியா சமாதானத்தை தேவனில் மாத்திரமே பெறலாம் என்றார் புனித அகுஸ்தீனூர்.

# வீட்டுக்கொரு காவலன் தேவை!

வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்துள்ள இக்காலத்தில் காவலன் தேவை என்றதும் விண்ணப்பம் அனுப்பி விடாதீர்கள். எது தேவை —எங்கு தேவை— ஏன் தேவை என்பவற்றை ஆராய்ந்து படியுங்கள்; எல்லாம் புரியும்.

வீடு—வீட்டுக்கொரு வேலி—வேலியில் ஒரு வாசல்—வாசலில் ஒரு (கேற்) அல்லது ஒரு படலை அதற்கொரு பூட்டு. வீட்டிற்குப் பல கதவுகள், கதவுகளுக்கெல்லாம் பூட்டு! வீட்டிற்குள் மேசை, லாச்சி, அலுமாரி, பணப்பெட்டி, இரும்புப்பெட்டி, பெட்டகம் எல்லாவற்றிற்கும் பூட்டு.

### ஏன் பூட்டு?

பணம், பொருள் என்பவற்றைப் பாதுகாக்க. வாசலில் உள்ள பூட்டுப் போதாதா? கதவில் உள்ள பூட்டுத்தான் போதாதா? லாச்சி, பெட்டி, என்பவற்றில் உள்ள பூட்டுத்தான் போதாதா? போதாது!

வீட்டில் ஒரு கடிநாய் அதற்கொரு போட். "நாய் கடிக்கும் கவனம்." ஒரு காவற்காரன். அதுவும் போதாது. பணம் ஏராளம், பொருள் ஏராளம், காவற்காரன் கையில் ஒரு துப்பாக்கி! இதுவும் போதாது. பொலிசாரின் தீவிர கண்காணிப்பு.

"பத்திரிகை! பத்திரிகை!!" பையன் வருகிறான். "காவற்காரன் கொலை, பாங்கிலே திருட்டு!" வீடு உடைத்து நகைகள் திருட்டு! வாசல் எங்கே? காவல் எங்கே? பூட்டு எங்கே? நாயின் போட்டு எங்கே? தினம் தினம் உலக வாழ்க்கையில் நடைபெறும் உண்மைச் சம்பவங்கள் இவை. ஊழல் நிறைந்த உலக வாழ்க்கை

— இ. பேர்ணுட்

அல்ல. நித்திய இன்பம் அளிக்கும் ஞான வாழ்வு ஒன்று எமக்குண்டு. நித்திய இன்பத்துக்கு இட்டுச் செல்ல இந்த ஞான வாழ்வு ஒன்றினால்தான் முடியும்.

உலக வாழ்வு போன்று எம் ஞான வாழ்விற்கும் பூட்டு வேண்டும்— காவலன் வேண்டும். வாரம் வாரம் தவறாது வருகிறான் காவலன்! எம் ஞான வாழ்வின் சிறந்த காவலன்தான் இந்தக் காவலன். வாரம் வாரம் இவன் நம் வீட்டுக்கு வருவானால் எம் ஞான வாழ்வில் நாம் தேடிய செல்வங்களை எந்தத் திருடனும் (சாத்தான்) திருட முடியாது: விசுவாசம் என்னும் எம் ஞான வாழ்வின் பூட்டை எவரும் உடைக்க முடியாது: இவன் வந்து எம் ஞான வாழ்க்கைக்கு ஊக்கமும், ஆக்கமும் தந்து புண்ணிய வாழ்வைப் பலுகச் செய்வான். கத்தோலிக்க வீடுகளில் இந்தக் காவலனை வரவேற்று எம் ஞான வாழ்வின் காவலனாக நியமிக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு இல்லத்திலும் இந்தக் காவலன் நுழைவானானால் எம் ஞான வாழ்வின் திரவியங்களை எவர்தான் திருட முடியும்? இவனை எம் வீடுகளில் வரவேற்பது ஒரு கடமையும் ஆகிறது. கவர்ச்சி இல்லாத காவலன்தான். ஆனால் அவன் ஏனைய ஏடுகள் போன்று உணர்ச்சி தூண்டுபவன் அல்ல— அழகு ரூபத்தில் ஆபாசம் கலந்து தருபவன் அல்ல.

பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்ற பெயரில் சில திருடர் எம் வீடுகளில் புகுந்துவிடுகின்றனர். புகுவது மட்டுமல்லாமல் எம் ஞான வாழ்வில் திருடவும் முயற்சி செய்கின்றனர்.

திருடர் என்று தெரிந்தும் தீங்கிழைப்பவர்கள் என்று புரிந்தும் இவற்றை ஏன் நம் இல்லங்களில் வருவிக்கிறோம்? எமக்குத் தீங்கிழைப்பவர்களுக்கு நம் வீட்டில் இடமளிப்பது எத்தகைய மடமைத்தனமான செயலன்றோ!

### அடிக்கடி சினிமாவா?

நாமும் அறிந்தும் அறியாமலும் தீங்கை நாடி ஓடுகிறோம். அவற்றுள் முதன்மை வாய்ந்தது சினிமா; ஏனையது தீய நண்பர். சினிமா பற்றி சின்னப்ப தந்தை கூறுவதையே கேட்போம்! "மனித உள்ளங்களை ஈர்க்கும் வல்லமை வாய்ந்த சினிமா, தொலைக்காட்சி ஆகிய இரண்டும் மக்களின் ஆன்மீகப் பண்புகளைச் சீர்குலைத்து வருகின்றன. திரையில் காணும் காட்சிகள், கேட்கும் சொற்கள், பாடல்கள் என்பன நினைவில் பதிந்து சிந்தனையை ஒருபக்கமாக இழுக்கின்றன. இதனால் சிந்திக்கும் ஆற்றலை இழந்து உணர்ச்சிகளுக்குக் கட்டுப்படுகின்றார்கள். குறிப்பாக இளைஞர் திரையில் கண்டதை வாழ்வில் செயல்படுத்த முனைகின்றனர். கண்டதும், கேட்டதும் காதுகளிலும், கண்களிலும் எதிரொலித்துக் கொண்டிருப்பதால் ஆன்மீக காரியங்களைப்பற்றிச் சிந்திக்க விருப்பமிழந்து உடலின் சிற்றின்ப நாட்டங்களில் சிக்கித் தவிக்கிறான். அடிக்கடி சினிமா பார்க்கச் செல்வோர் நன்கு அறிந்த உண்மை இது."

### பெற்றோர்க்கு எச்சரிக்கை!

சமூகத் தொடர்பு பற்றிய தீர்மானத் தொகுப்பில் 2-ம் வத்திக்கான் சங்கம் பெற்றோர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. "இக்கருவிகளைப் பயன்படுத்துவோர் குறிப்பாக இளைஞர் அளவோடும், கட்டுப்பாட்டோடும் இவற்றைப் பயன்படுத்தப் பழகவேண்டும். விசுவாசத்துக்கும், நல்லொழுக்கத்துக்கும் ஊறு செய்யும் காட்சிகள், வெளியீடுகள் என்பன இடம் பெறாமலும், அல்லது இவை பிள்ளைகளின் கண்களுக்குத் தென்படாமலும் இருக்கக் கண்ணுங்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல தேசங்களில்

● பிரித்தானிய பாராளுமன்றசிற்றாலயத்திலே அன்று சனிக்கிழமை எலிசபெத் என்ற குழந்தைக்கு வண. மிக்கேல் கொலின்ஸ் சுவாமியாரால் ஞானஸ்நானம் அருளப்படலாயிற்று. இந்தக் குழந்தை டக்றர் டேவிற் ஜெஜெல்மன் தம்பதிகளின் புதல்வியும், அங்கு சவுதெண்ட் தொகுதியின் எம். பி. ஆன சேர் ஸ்ரீபின் மைக்கெடன் அவர்களின் பைத்திரியுமாவள்.

● சமீபத்திலே சீனாவிலே சிறைச்சாலை ஒன்றிலிருந்து 12 வருட சிறைவைத்தலின்பின் விடுதலை செய்யப்பெற்ற 79வயதுடைய ஓர் அமெரிக்க மிஷனரியாகிய வால்ஷ் மேற்றிராணியார் இம்மாதம 24ஆம் திகதியன்று ஹொங்கொங்கிலிருந்து விமானமூலம் றோமாபுரிக்கு செல்வாரென எதிர்பார்க்கப்படுவதாய்ச் செய்தி கிடைத்திருக்கிறது.

● கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ரூமேனியாவும் ஒன்றாகும். அங்கு சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப்பிரவாகத்தினால் பல்லாயிரக் கணக்கான மக்கள் விடுவாசலற்று அந்தரிக்கின்றார்கள்; அவர்களுக்கு உதவியாகப் பரிசுத்தபாப்பாசர் 41,000 பவுண் அனுப்பி வைத்திருக்கின்றார்.

● வருகிற கார்த்திகை மாதம் ஆஸ்திரேலியாவுக்குப் பரிசுத்த பாப்பாசர் விஜயஞ் செய்யவிருக்கின்றார். அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக வத்திக்கான் பொருளாதாரபகுதியின் காரியதரிசியான மார்சின் குஸ் மேற்றிராணியார் சிட்னிநகர் சென்றிருக்கின்றார்.

● அன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை காலத்தைக் கழிப்பவர்களுக்குச் சின்னப் பாப்பாசர் காஸ்ரெல் காண்டல போவிலுள்ள தமது வேனிற்கால விடுமுறை வாசஸ்தலத்தில் அளித்தபேட்டியிலே அவர்கள் தங்கள் செபங்களை மறக்கப்படாதெனத் தூண்டினார். ஏனெனில், எக்காலத்திலும் பார்க்க இக்காலத்திலே செபங்கள் அதிகமாக வேண்டியிருக்கின்றனர்; ஏனெனில், சனசமூகத்தின்மீது பயங்கர அச்சுறுத்தல்கள் சூழ்ந்திருக்கின்றனவென்று அவர் கூறலாயினர்.

● வாயை நன்கு பரிசோதிப்பதனமூலம் சாதாரண புற்றுநோயைக் கண்டுபிடித்துவிட முடியுமென்றும், வாயிலிருந்துதான் புற்றுநோய் ஆரம்பிக்கிறதென்றும் அமெரிக்க புற்றுநோய்ச் சங்கம் ஆராய்சசியிலே கண்டறிந்திருக்கிறது. அதனுல் உடம்புக்குப போஷாக்கான உணவுகள் உட்செல்லும் நுழைவாசலனவாயை எப்போதும துப்புரவாகவும், கவனமாகவும் பேணிவர வேண்டுமெனப தைச சமீபத்தில் நடத்திய ஆராய்சசிகள் உணர்த்துகின்றன.

● உலகின் பல நாடுகளிலும வருடந்தோறும் லட்சக் கணக்கான மக்களின் உயிரைப் பலியெடுத்து வருகின்ற காசநோயைக் குணமாக்குவதற்கெனக் கடந்த பத்துஆண்டுகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மருந்துகளில் "ஐசோனியாகிற்," "தியோசெற்சேடான்" என்பன மிகமுக்கிய மானவைகள். இந்த மருந்துகளாலே உலகில் காசநோயின் உக்கிரம் குறைந்து கொண்டு வருகிறது என்பது அனுபவத்தில் கண்டறியப்பட்டதாகும்.

● சென்னையிலுள்ள காசநோய் ஆராய்ச்சி நிலையம் ஒன்றில் பணியாற்றிவந்த ஒரு பிரித்தானிய நிபுணரான டக்றர் வாலஸ் பாக்ஸ் அவர்கள் கிழக்கு ஆபிரிக்காவிலும், இந்தியாவிலும் நெடுநாள் நடத்திய ஆராய்ச்சியின் விளைவாக "ஐசோனியாகிற்," தியோசெற் சேடான்" எனும் இருமருந்துகளையும் எளிய முறையில் கலந்து காசநோய் நிவாரண புதிய மருந்து ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். இதனை வாரம் ஒருமுறை ஊசிமூலம் செலுத்தியும், வாரம் இருமுறை உள்ளே அருந்தியும்வந்தால் போதும்; நிச்சயமாகப் பூரணசுகமுண்டாவதாகச் சொல்லப்படுகிறது,

● நோயாளரின் வாயை நன்கு பரிசோதித்தும், முகத்தை அவதானித்தும் அவர்களின் உடம்பில் ஏற்படும் வயிற்று நோய் முதலாம் சுமார் 200நோய்களைக்கண்டுபிடித்துவிட முடியுமென்று ஐக்கிய அமெரிக்க தேச கலிபோனிய சர்வகலாசாலைப் பல்வைத்தியநிலைய விரிவுரையாளரான டக்றர் பிறுங் டோறியா அவர்கள் பலவித பரிசோதனைகள்மூலம் கண்டறிந்து தெரிவிக்கின்றார்.

● உலகிலுள்ள குருடர்கள் சுதந்திரமாக வாழ்க்கை நடத்துபபடி செய்யச் சிறுபேனு போன்ற ஒரு சாதனம் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. "எலக் ரோனி" பொறிகள் நிறைந்த இந்தக் "குருடர் பேனு"வைப் பாவிப்பவர்களுக்கு வேண்டிய தகவல்களை சிறு ஒலிகள்மூலம் இது அளிக்கின்றது. அதனுல் எதிரேவரும்காரின்விளக்கொளியை உடனடியாக அறிந்துகொள்வது, குழந்தைபின் பாற்போத்தலில் பால் நிரப்புவதுபோன்ற பலசெயல்களைப் பிறர் உதவியின்றி அவர்கள் செய்வதற்கு இந்த அதிசயபேனு உதவுகின்றது.

● ஆஸ்திரேலியாவிலே திருச்சபையின் முதலாவது இளவாசரான கருதினல் கில்ரோய் ஆண்டகை தமது 75-வது பிறந்த பெருநாளை அடுத்தவருடம் கொண்டாடும்போது தம்முடைய பதவியிலிருந்து இளைப்பாறவிருக்கின்றார். அவர் சமீபத்திலே மார்புநோய் காரணமாகச் சிட்னிநகர் ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சைபெற்றார்.

● நீர்கொழும்பிலுள்ள மாறிஸ்ரெல்லா கல்லூரிப் பழைய மாணவர்களாய் இலங்கைப புதிய பாராளுமன்றத்தில் ஏழுபேர் அங்கத்தவர்களாய் இருக்கின்றனர். இவர்களில் ஒருவர் மந்திரி, இருவர் உதவிமந்திரிகள், ஒருவர் நியமன அங்கத்தவர். ஏனையோரெல்லாம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள். கல்லூரிப் பழைய மாணவர்சங்கம் அன்று இவர்களை ஒருங்கே அழைத்து விருந்திட்டு உபசரித்திருக்கிறது.

● இங்கிலாந்திலே ஸ்ரொக்போட் நகரின் புனித சூசையப்பர்கோவில் பங்குக்குருவாயிருந்து சமீபத்தில் இடமாற்றம் செய்யப்பட்ட வண. யோசெவ் றசெல் சுவாமியாரது பிரிவின்போது அக்கோவில் கிறிஸ்தவர்கள் அவருக்கு ஒரு செக் அன்பளிப்புச் செய்தார்கள். அப்போது சுவாமியார் கிறிஸ்தவ ஒற்றுமைக்காக ஆற்றிய சேவையைப் பாராட்டி அங்குள்ள சென்பீற்றர் அங்கிளிக்கன் கோவிலைச் சேர்ந்தவர்களும் ஒரு செக்கை வழங்கினர்கள்.

● உலகில் இரண்டாவது அணுக்குண்டு வீசப்பட்ட இரண்டாவதுநகர் ஜப்பானிய தேச நாகார்பட்டணமாகும், இது ஒரு கடற்படைத்தளமும், கைத்தொழில் நகரமும், பிரதான கடற்துறைமுகமுமாகும். இது அப்போது விசேஷப்பட்ட யுத்தகால பெரிய கைத்தொழில் யந்திரங்கள் பலவற்றை அடக்கியிருந்தது. அங்கு ஆவணி மாதம் 6ஆம் திகதி முதலாவது அணுக்குண்டு யொக்கோகோமாநகரில் வீசப்படலாயிற்று.

● ஜப்பானிலே நாகாசகி நகரில் இரண்டாவது அணுக்குண்டு வீசப்பட்ட 25-வது ஆண்டு நிறைவுதினம் இம்மாதம் 9ஆம் திகதி வந்துபோயிற்று. இந்த அணுக்குண்டு "பி-52"எனும் இராட்சத சூப்பர் போட்றெஸ் விமானத்தில் கொண்டுசென்று மேஜர் சாள்ஸ் சுவினி என்ற விமானியால் வீசப்படலாயிற்று.

● தென்னிந்தியாவிலே தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பெரிய அனிக்கோட்டையிலிருந்து சுமார் ஆறு கிலோமீற்றர் தூரத்திலிருக்கின்ற ஒன்பதாம் நூற்றுண்டைச் சேர்ந்த இடிகரையான ஒருகோவிலைத் தமிழ்நாட்டுப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் கோஷ்டி ஒன்று தோண்டி ஆராய்ச்சி செய்தபோது, சிற்பவேலைப் பாட்டிலே இராமாயணத்தின் சரிதையை விபரமாக விளக்கும் தொடர்வரிசையான பெயர்ப்பட்டியலைக் கண்டுபிடித்திருக்கிறது. இதிலிருந்து இராமாயணத்தைத் தமிழில் இயற்றிய கவியரசர் கம்பனைப் பற்றி அறிந்துகொள்ள வழி [illegible]

# குடும்ப செபமாலை இயக்கம்

1942ஆம் ஆண்டுஐக்கிய அமெரிக்க தேசத்திலே குடும்ப செபமாலைப்படையணியை அடியிட்டு அதற்கு ஞானத்தளபதியாக விளங்கும் வண. பற்றிக் பெயிற்றன் அடிகளார் அகிலமுழுவதிலும் குடும்பசெபமாலைப் பக்தியை இன்னுமே வெற்றிகரமாகப் பரப்பியவண்ணம் இருந்து வருகின்றார். சமீபத்திலே அவர் மெக்சிக்கோ நாட்டைச்சேர்ந்த யுக்கற்றுன்குடாநாட்டில் இந்த இயக்கத்தைப் பரப்பிய பின்னர் லொஸ் ஆஞ்சேல்ஸ் நகரிலுள்ள தம்முடைய தலைமைஸ்தானத்திற்குத் திரும்பியிருக்கிறார். யுக்கற்றுனின் அதிமேற்றிராணியாரான காஸ்ரோ ஆண்டகை இதற்கென அவரை வரவழைத்து, அங்கு நடைபெற்ற செபமாலைப்படையணிச் சமாகமங்களிலெல்லாம் தலைமைதாங்கினர் "ஒருமிக்கச் செபிக்கும் குடும்பம் ஒருமிக்க நிலைத்திருக்கிறது என்பது இன்னுமே இப்படையணியின் சுலோகமாய் இருந்துவருகிறது. ஐக்கிய அமெரிக்க தேச றேடியோ நிகழ்ச்சிநிரல்களும், ரெலிவிஷன் காட்சிகளும் இப்படையணியை ஆதரித்து 1940ஆம் ஆண்டு பெயிற்றன் அடிகளாரின் குடும்ப படமாளிகை றேடியோ நிகழ்ச்சி நிரல்களில் பிங் குறெஸ்பி, பொப் ஹோம், லொறெற்ருயக், சாள்ஸ் போயர், போன்ற பிரபலநடிகர்களும் அடங்கியிருந்தார்கள்.

## வந்து பாருங்கள்

இங்கிலாந்து தேசத்தில் ஒரு கன்னியாஸ்திரி மடத்தில் ஆன்ம குரவராகத் தொண்டு செய்துவரும் ஹெகாட்டி அடிகளாரின் யோசனையின்மேல் லண்டன் நகரின் உள்ளும் புறமும் இருக்கும் சுமார் 60 கன்னியர்மடங்கள் தங்கள் வேலைகளை விரும்பியவர்கள் சென்று பார்த்துப்போக வசதி அளிக்கத் திட்டமிட்டிருக்கின்றன. மடங்களைப் பற்றி உள்ள தப்பபிப்பிராயங்களை நீக்கவே இவ்வாலோசனையை ஹெகாட்டி சுவாமியார் கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிறு தினத்தை இத் திட்டத்தில் சேர்ந்துகொள்ளும் சுமார் 60 மடங்களும் அனுசரித்துவர சம்மதம் தெரிவித்திருக்கின்றன. தற்போது வெளியே உள்ளவர்களுக்கு மடங்கள் மூடுமந்திரங்களாகவும் விளங்குவதற்கரிய தலங்களாகவும் இருப்பதால் இம்முறையினுல் தப்பபிப்பிராயங்கள் நீங்கி அங்கு நடைபெறும் சிறந்த வேலைகள் அம்பலப் படுத்தப்பட்டுத் தேவ அழைத்தல்கள் முன்னிலும் அதிகரிக்கும் என்பது சுவாமியாரின் அபிப்பிராயம்.

● 1967ஆம் ஆண்டின் ஆனிமாத இசிறவேல் - அராபிய யுத்தத்தின்போது சுவெஸ்கால்வாயில் அகப்பட்டுக்கொண்ட நான்கு பிரித்தானிய வியாபாரக்கப்பல் இன்னுமே அதிலிருந்து வெளியேற முடியாதிருக்கின்றன. நஷ்ட உத்தரவாதம் அளிக்கும் இன்ஷியூறன்ஸ் கம்பெனிகள் அவற்றிற்கு நஷ்டஈடாக ஒரு கோடிபவுண் வழங்கியிருக்கின்றன. மேலும அவைகளைக் கண்காணித்துவரும் செலவிற்கெனப் போலிஷ், செக்கோசிலவாக்கிய கப்பற்கம்பெனிகளுக்கு மாதந்தோறும் 4,000 பவுண் கொடுக்கப்படுகிறது.

## முதலாவது கம்யூனிஸ்தநாடு

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிய இந்த உடன் படிக்கையானது ஏனைய கிழக்கு ஐரோப்பியநாடுகள், விசேடமாய்க் கத்தோலிக்க மக்களைப் பெருந்தொகையினராகக்கொண்ட செக்கோசிலவக்கியா, ஹங்கேரி, போலாந்து ஆகிய நாடுகள் வத்திக்கானுடன் உறவுகொள்வதில் பரீட்சார்த்தமான சிலநடவடிக்கைகள்பற்றி ஆலோசிக்கத் தூண்டுமென நம்பப்படுகிறது. மேலும் வத்திக்கான்—யூகோசிலேவிய உடன்படிக்கையானது, யூகோசிலேவிய ஜனதிபதி ரிற்றோ அவர்கள் ஒருசமயம் இவ்வாண்டின் பிற்பகுதியில் றோமாபுரி செல்லுமிடத்து; வத்திக்கான் மாளிகை சென்று அதிகாரபூர்வமாகப் பாப்பரசரைச் சந்திக்க அனுமதிப்பதாகும். இன்னும் 1971ஆம் ஆண்டிலே பாப்பரசர் யூகோசிலேவியாவுக்கு விஜயஞ் செய்வதற்கும் வழிபண்ணுவதாகும். அப்போது எந்த ஒரு பாப்பரசராவது தரிசிக்கும் முதற் கம்யூனிஸ்தநாடு அதுவாகும். தமது நாட்டுக்கு விஜயஞ்செய்யுமாறு ஜனதிபதி ரிற்றோவும் அதிகாரபூர்வமாகப் பாப்பரசரை அழைப்பாரென அடிக்கடி செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

## வீட்டுக்கொரு...

[ 4-ம் பக்கத் தொடர்ச்சி]

கருத்துமாய்க் காவல் செய்வது தங்கள் கடமை எனதைப் பெற்றோர் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும்" (சங். ஏடு 353 பக்:).

எனவே, கத்தோலிக்க இல்லங்களுக்குக் காவலனைக் காவலாகக் கொள்ள வேண்டியது பெற்றோர்களினதும், மற்றோர்களினதும் தலையாய கடமையாகும்.

காவலனே நீ வருவாயே! ஞான வாழ்விற்குக் காவல் தருவாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

### புரட்டாதி — 1970

| | | | |
|---|---|---|---|
| 6 | ஞாயிறு | வருடத்தின் 23-ம் ஞாயிறு | [ப] |
| 7 | திங்கள் | தினப்பூசை | [ப] |
| 8 | செவ்வாய் | மரியாள் ஜனனம் | [வெ] |
| 9 | புதன் | தினப்பூசை | [ப] |
| 10 | வியாழன் | ,, | [ப] |
| 11 | வெள்ளி | ,, | [ப] |
| 12 | சனி | ,, | [ப] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# தேவதாயும் திருச்சபையும்

நாம் தேவதாய்மீது கொண்டிருக்கும் அன்பு பெரிது; ஆனால் அது பெரும்பாலும் உணர்ச்சிவசமானது. ஒருவிதத்தில் அது நன்மையானதுதான். ஏனெனில் அவள் எப்போதும் எம்மைத் தமது திருமகனிடத்தில் அழைத்துச் செல்லக்கூடியவளாயிருப்பதால் இப்பக்தி எம்மைக் கிறிஸ்துநாதரிடம் சேர்க்கின்றது. ஆனால் இன்னொருவிதத்தில் இது அவ்வளவு விரும்பத்தக்கதன்று. எமது உணர்ச்சிவசமான அன்பு ஓர் இலக்கைத் தேடுகிறது அதை அடைந்ததும் அதை எமது உடைமையாகக் கருத ஆரம்பிக்கிறோம் மாதா எமது தாய், எமக்கே சொந்தம் என்று உரிமை பாராட்டி அவளுடைய பாதுகாப்பை நாடுகிறோம். ஆனால் எமது கடமைகளை மறந்துவிடுகிறோம். மாதாவுக்கு மலர்சூடி, தூபமிட்டு நோவினைகள் செய்வதுடன் எமது கடமைகள் முடிந்துவிடுவதில்லை. இவற்றைவிட மாதாவின் புண்ணியங்களைக் கண்டுபாவிப்பது அவசியமாகும். மாதாவை எமது உள்ளத்தில் ரூபீகரித்த ஒரு வடிவமாக இல்லாமல், நற்செய்தி ஏடுகளில் நடமாடும் ஒரு பிரதான பாத்திரமாக நோக்கும்போது, அவள் தனிப்பட்ட கிறீஸ்தவனுக்கு மட்டுமல்ல, திருச்சபைக்கே ஒரு முன்னேடியாக இருப்பதைக் காணலாம்.

நாம் வழக்கமாக மாதாவை ஒரு மோட்சவாசியாகக் கருதுகிறோமேயொழிய ஒரு மானிடப் பெண்ணாகக் கருதுவதில்லை. நற்செய்தி ஏடுகளில் அவளது மானிட இயல்பும், அவளை வானுக்கு உயர்த்திய புண்ணியங்களும் வெளிப்படையாகத் தோன்றுகின்றன. மரியாயின் புண்ணியங்கள் எல்லாவற்றுக்கும் அடித்தளமாக அமைந்தது அவளது விசுவாசமாகும். அவளது ஒவ்வொரு செயலும் விசுவாசத்தினால் தூண்டப்பட்டதாயிருந்தது. மரியாயின் இவ்விசுவாசத்தை ஆபிரகாமின் விசுவாசத்தோடு பலர் ஒப்பிட்டிருக்கின்றனர். பழைய ஏற்பாட்டில் விசுவாசிகளின் தந்தையாக விளங்கிய அபிரகாமைப் பின் தொடர்ந்து புதிய ஏற்பாட்டில் மரியாய் விசுவாசிகளின் தாயென அழைக்கப்படுகிருள். புனிதர்களுள் முதன்மையானவளும் திருச்சபைக்கு ஒரு பிரதிரூபமானவளும் ஆகிய மரியாயை முதன்முறையாகத் தேவதூதனது மங்கள வார்த்தையின்போது காண்கிறோம். இங்கு பூர்வாங்க வேலை இறைவனுடையதாயிருந்தபோதிலும், மரியாய் தனது தாழ்ச்சியையும் கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்திய செயலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இறைவனது அருள் செயல்படுவதற்குத் தன் மானிடத்தன்மை முழுவதையும் அர்ப்பணிக்கும் மரியன்னை இறைவனோடு ஒத்து இயங்கும் திருச்சபைக்கு முன்னேடியாக இருக்கிருள்.

தேவதாய் எலிசபேத் அம்மாளைத் தரிசித்தபோது "பாக்கியவதி" என்னும் அடைமொழி அவளுக்கு அளிக்கப்படுகின்றது. யேசுநாதர் தமது மலைப் பிரசங்கத்தின்போது பாக்கியவான்கள் எத்தன்மையவர்கள் என்று கூறினரோ. அத்தன்மைகள் அனைத்தும் மரியாயிடத்தும் பின்பு திருச்சபையிடத்தும் காணப்படுகின்றன. இங்கு "பாக்கியம்" என்பது உலக இன்பத்தையோ புகழையோ குறிக்கவில்லை. இறைவனைப் போன்றிருத்தல், அதாவது அவரோடு ஒன்றித்து, அவரது அன்பில் பங்குகொள்ளுதலைக் குறிக்கின்றது, திருச்சபையின் பணியும் இதேதான்.

சிலுவையடியில் தேவதாய் நின்றபோது, தன் மகனது மரணத்தையிட்டு இயற்கையாக எழுந்த வியாகுலத்தை அனுபவித்ததுமட்டுமல்ல, கிறிஸ்துவுடன் பூரணமாக ஒன்றித்து அவருடைய பாடுகளில் தானும் பங்கெடுத்தாள். இதேபோன்று திருச்சபையும் தன்னை முற்றும் கையளித்து கிறிஸ்துவின் பாடுகளில் பங்குபெறவேண்டியிருக்கின்றது.

திருச்சபையே மானிட உருவேடுத்ததுபோன்று அதன் தன்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கிய தேவஅன்னை இன்று திருச்சபை மாதா என்னும் நாமந்தாங்கித் திருச்சபையைப் பாதுகாத்து வருகின்ருள். திருச்சபை அதாவது இறைமக்கள் அனைவரும் கூட்டாகவும் தனித்தனியாகவும் அவளை நன்கு அறிந்து நேசித்து, பின்பற்றி தாயின்மக்களாக விளங்குவார்களாக.

### வத்திக்கானில் புதுவாகன போக்குவரத்துச் சட்டம்

வத்திக்கான் இராச்சியத்தில் உபயோகிக்கப்படும் வாகனப் போக்குவரத்துக்களுக்கெனப் புதிய சட்டம் வகுக்கப்பட்டிருக்கின்றது. சட்டத்தை மீறுபவர்கள் கருதினல்மாராயினும், ஒரு தோட்டத் தொளிலாளனாயினும் கடும் தண்டனைகளுக்கு ஆளாக வேண்டுமென எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கின்றது.

### 7,000ஆங்கில யாத்திரிகர்கள் ரோமாபுரி செல்வர்

ஐப்பசிமாதம் 25-ந்திகதி வத்திக்கானில், 40 ஆங்கில வேதசாட்சிகளுக்கு அர்ச்சிய சிஷ்டபட்டம் அளிக்கும் வைபவத்தில் பங்குபெற ஆங்கில நாட்டிலிருந்து சுமார் 7,000 யாத்திரிகர்கள் செல்ல இருக்கின்றனர், 11 ஆகாய விமானங்கள் இதற்கென ஒதுக்கப்பட்டதுடன், புகையிரதவசதிகளும், கப்பல் வசதிகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன.


யாழ்ப்பாண மேற்றிராசன

## கத்தோலிக்க ஆசிரியைகளின் வருடாந்த ஞானஒடுக்கம்

மேற்படி ஞான ஒடுக்கம் 1970-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 6-ந் திகதி ஞாயிறு மாலை 5-00 மணிக்கு பண்டத்தரிப்புக் கன்னியர்மடத்தில் (ஞான ஒடுக்க இல்லத்தில்) திவ்வியபூசையுடன் ஆரம்பமாகி, 9-ந் திகதி கருத்தரங்குடன் மாலை 4-00 மணியளவில் நிறைவுபெறும். தயவுசெய்து பங்குபற்றுவோர் நேரகாலத்துடன் கீழ்க்காணும் விலாசத்துக்கு அறிவிக்கவும்.

ஞான ஒடுக்க போதகர்:
வண. எஸ். ஜே. இம்மனுவல் அடிகளார்.

கருத்தரங்கு நடத்துபவர்:
வண, ஜி. ஏ, பாலசுந்தரம் அடிகளார்.

கருத்தரங்குப் (9-9-70) பேச்சாளர்:
காலை 8 மணி (1) திருமதி ஆர். எஸ். பாமர், E. O.
,, 10 மணி (2) திரு. ஜே. ஜி. அரசரட்ணம்,
இளைப்பாறிய அதிபர்.

மாலை (1) திருமதி எம். சவிரிமுத்து அவர்கள்
(2) பொது நிர்வாகக் கலந்துரையாடலும், நிர்வாக அங்கத்தவர் தெரிவும்.

Mother Provincial

Rev. Mother Superior,
'Retreat House',
Hoy Family Convent,
Pandatha.ippu.


## இந்தியாவில் ஒருபுதிய மேற்றிராசனம்

இந்தியாவில் பெனுறஸ் பகுதியில் ஒரு புதிய கத்தோலிக்க மேற்றிராசனம் நிறுவப்பட்டிருக்கின்றது. இதன் முதல் மேற்றிராணியாராக பற்றிக் டி சூசா அடிகளார் நியமனம் செய்யப்பெற்றிருக்கின்ருர். புதிய மேற்றிராணியாரை அபிஷேகம்செய்து வைத்தவர் இந்திய கருதினல் கிருசியாஸ் அடிகளாரே. அவர் அந்த வைபவத்தில் செய்த பிரசங்கத்தில் ஒரு மேற்றிராசனத்தின் ஆயராக நியமிக்கப்படுபவர் அப்பிரிவில் ஒற்றுமையின் சின்னமாகவும், வறுமை, பசி, பிணி, சமூகசீர்கேடு முதலியவற்றைப் போராடும் முன்னணியின் தலைவராகவும் விளங்கக்கடமையுடையவர் ஆகின்ருர் என எடுத்துக் கூறினர், டிசூசா அடிகளார் இந்தியாவிலுள்ள சிறந்த கல்விமான்களில் ஒருவர். இந்தியாவிலும், ரோமாபுரியிலும் உள்ள சர்வகலாசாலைகளின் அதி உன்னத பட்டங்களைப் பெற்றவர் மாத்திரமன்றி பௌதிகதுறையில் அவர் ஆற்றிவரும் கல்வித்தொண்டுக்கு இந்திய அரசாங்கம் அவருக்கு விசேஷ சன்மானமும் அளித்திருக்கின்றது.

### வத்திக்கானில் புதிய ஆங்கில அரசாங்க தூதுவர்

சென்றவாரம் பரி. தந்தை ஆங்கில அரசாங்கத்தினரால் நியமிக்கப்பட்ட புதிய அரசாங்கத் தூதுவராகிய திரு. டெஸ்மன்ட் கிறெளலி அவர்களை வரவேற்று அவரது நியமனப்பத்திரத்தைக் கையேற்றுக் கொண்டார. ஆங்கில நாட்டு அரசாங்கத்துடன் வத்திக்கானுக்கு உள்ள சிநேகபான்மையை வற்புறுத்தித் திருச்சபை கண்ணுங் கருத்துமாயிருக்கும் கல்வி, ஆன்மகரும பரிபாலனம் ஆகியவற்றில் இருசாராருக்கும் மென்மேலும் திருந்திய தொடர்பு நிலவ முயற்சிக்க வத்திக்கானைப் பொறுத்த வரையில் உறுதிமொழி பகர்ந்தார்.

## லூர்துபதி அற்புத ஆரோக்கியம்

லூர்து திருப்பதியிலே கடந்தமூன்று மாதங்களிலும் அற்புதமாகக் குணமடைந்தார்களென அறிக்கையிடப்பட்டுள்ள எண்மரில் ஸ்கொத்திலாந்திலும், அயர்லாந்திலும் இருந்துபோன இருபிள்ளைகளும் அடங்குவார்கள். ஸ்கொட்டிஷிய பிள்ளை சிறுநீரகத்தில் உயிருக்கு ஆபத்தான சதைவளர்ச்சியும், ஐரிஸ்காரப் பிள்ளை திமிர்வாதமுங்கண்டு வருந்தினர்கள். இவர்களின் வைத்திய விபரங்கள்பற்றிய அறிக்கைகள் லூர்துபதியிலுள்ள வைத்தியஆராய்ச்சி அலுவலகத்தாலே பரீஸ்நகரிலுள்ள சர்வதேச வைத்திய நிபுணர்களின் கழகத்தால் பரிசிலனை செய்யப்படுமாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. முன்சொன்ன இருபிள்ளைகளும் நீங்கலாக மற்றும் அற்புதமாகக் குணமடைந்தவர்களாய் பரிசோதனை செய்யப்படவிருக்கும் ஏனைய அறுவரிலும் ஒரு சுவிற்சர்லாந்த பெண்ணும், ஒரு ஜேர்மனிய பெண்ணும் இருபிராஞ்சிய ஆடவரும், ஓர் இத்தாலிய குருவானவரும் அடங்கியுள்ளார்கள்.

❊ இசிறவேல் - அராபிய யுத்தத்திலே வெற்றிபெற்ற இசிறவேலர்கள் சுவெஸ்கால்வாயின் கிழக்குக்கரை முழுவதையும் அடிப்படுத்திஆக்கிரமித்துக் கொண்டபோது சுவெஸ் கால்வாய் மூடப்படலாயிற்று. வனாந்தரத்தின் மத்தியில் ஓர் அகழிபோன்று காட்சியளிக்கும் இந்தக் கால்வாய்ப்பகுதியிலே இருசாராருக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் 90 நாள் யுத்தநிறுத்த சம்மதங்காரணமாக நடைபெற்றுவரும் சமாதானமுயற்சிகள் வெற்றியளிக்குமிடத்து அது மீண்டும் புழக்கத்துக்கு வருமென நம்பப்படுகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசையாமுனிவர் அச்சகத்தில் 1970ஆம் ஆ புரட்டாதியீ 5ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 நாளிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org